**செய்தி வெளியீடு எண்:278** **நாள்:15.06.2021**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின்**

**வழிகாட்டுதலின்படி ஆக்கிரமிப்பு நிலத்திலிருந்து மீட்கப்பட்ட சீதா கிங்ஸ்டன் மெட்ரிகுலேஷன் பள்ளியை இந்து சமய அறநிலையத்துறை ஏற்று நடத்தும்**

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர் பாபு அவர்கள் அறிவிப்பு**

காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு சென்னை, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் 141 கிரவுண்ட் நிலம் சொந்தமாக உள்ளது. இவற்றில் கதவு எண்.768–ல் 44.5 கிரவுண்ட் பரப்பில் சீதா கிங்ஸ்டன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி இயங்கி வந்தது இவற்றில் 2010–ம் ஆண்டு 12.5 கிரவுண்ட் இடம் திருக்கோயில் வசம் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டது. 99 ஆண்டு குத்தகை காலம் முடிவுற்ற பின் இணை ஆணையர் நீதிமன்றத்தில் சட்டப்பிரிவு 78–ன் கீழ் சுவாதீன உத்தரவு பெறப்பட்டு பின்னர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் கலவலக் கண்ணன் செட்டி சாரிட்டீஸ் மூலம் வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கில் திருக்கோயிலுக்கு சாதகமாக தீர்ப்பு பெறப்பட்டது. அதன் அடிப்படையில் இப்பள்ளிக்கூடத்தை தங்களால் தொடர்ந்து நடத்த இயலாது என கலவலக் கண்ணன் செட்டி சாரிட்டீஸ் நிறுவனத்தினர் தெரிவித்து 13.06.2021 அன்று காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் செயல் அலுவலரிடம் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் முன்னிலையில் கலவலக் கண்ணன் செட்டி சாரிட்டீஸ் நிர்வாக அறங்காவலரால் 32 கிரவுண்ட் இடம் மற்றும் பள்ளி கட்டடங்களுடன் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டு திருக்கோயில் வசம் முழுமையாக சுவாதீனம் பெறப்பட்டது.

இந்த நிலத்தில் இதுவரை நடத்தப்பட்டு வந்த சீதா கிங்ஸ்டன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 700க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பயின்று வந்த விவரம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது கவனத்திற்கு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரால் எடுத்துச் செல்லப்பட்டது. அதனை கேள்வியுற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதுவரை பயின்று வந்த மாணவச் செல்வங்களின் வருங்காலத்தை கருத்தில் கொண்டு இப்பள்ளியை இந்து சமய அறநிலையத்துறை ஏற்று நடத்திட உத்தரவிட்டார். அதன் தொடர்ச்சியாக இன்று (15.06.2021) ஆணையர் அலுவலகத்தில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் பள்ளிக் கல்வி துறை அலுவலர்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இந்த இடத்தில் இதுவரை நடத்தப்பட்டு வந்த சீதா கிங்ஸ்டன்

மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியை இந்து சமய அறநிலையத்துறை ஏற்று திருக்கோயில் நிர்வாகம் மூலமாக நடத்திட முடிவு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., பள்ளிக் கல்வி துறை ஆணையர் திரு.க.நந்தகுமார், இ.ஆ.ப., மற்றும் இதர அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இப்பள்ளியில் உள்ள கட்டடங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்படவும், தேவைக்கு ஏற்ப புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் எனவும் இப்பள்ளியில் ஏற்கனவே பணியில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் தொடர்ந்து பணி புரிந்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இதனால் அப்பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியர், அவர்களது பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் அச்சப்பட தேவையில்லை என்று இந்து சமய அறநிலையத்துறை தெரிவித்துக்கொள்கிறது.

இன்று (15.06.2021) பள்ளி வளாகத்தில் அடிப்படை வசதிகள் குறித்து அமைச்சர் ஆய்வு செய்து தேவையான பணிகளை உடனே மேற்கொள்ளுமாறும், இப்பள்ளிக்கு வருகை தந்திருந்த மாணவ செல்வங்களின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கைளை சந்தித்து இப்பள்ளி தொடர்ந்து சிறப்பாக செயல்பட இந்து சமய அறநிலையத்துறை அனைத்து ஏற்பாடுகளையும் செய்யும் என்று தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியின் போது சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்திரமோகன், இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மண்டல இணை ஆணையர் திரு. ஜெயராமன் மற்றும் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் செயல் அலுவலர் திரு. தியாகராஜன் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**